[1971 ஜூலை 20

திரு. கு. காமாட்சி: சீரணித் தொண்டர்கள் நாள் ஒன்றுக்கு இரண்டு ரூபாய் பெற்றுக்கொள்கிறார்கள் என்று கூறப்பட்டது. அந்த இரண்டு ரூபாய் கூடப் பெற்றுக்கொள்ளாமல் பணி புரிவது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இரண்டு ரூபாய் பெற்றுக் கொள்ளாமல் சிலவிடங்களில் பணியாற்றி வருகிறார்கள். ஆனால் அந்த இரண்டு ரூபாய் என்பது அவர்களுக்கு ஊதியமாகத் தரப்படுகிறது என்பது பொருள் அல்ல. அவர்களுக்கான உணவு, மற்றத் தேவைகளுக்காக அது தரப்படுகிறது. சீரணி என்றாலே தானே முன்வந்து செய்கிற தொண்டு என்று பொருள்.

திரு. நா. வீராசாமி: சென்னையில் மட்டும் இந்தச் சீரணித் தொண்டர்கள் பயன்படுத்தப்படுகிறார்கள். ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலுமுள்ள போக்குவரத்து இலாகாவில் இந்தச் சீரணித் தொண்டர்களின் சேவையைப் பயன்படுத்திக் கொள்ள அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாவட்டத் தலைநகரங்களிலும் இந்தத் தொண்டர்களைப் பயன்படுத்தும் யோசனை இல்லை. தேவைப்படுமானால் அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) கவன ஈர்ப்பு.

தனியார் கல்லூரிகளில் மாணவ, மாணவிகளைச் சேர்த்துக் கொள்வதில் ஏற்படுகின்ற முறைகேடுகள்பற்றி.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, தனியார் கல்லூரிகளில் மாணவ, மாணவிகளைச் சேர்த்துக் கொள்ளுவதில் ஏற்படுகின்ற முறைகேடுகளைப் பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை, சட்டப் பேரவையின் 41-வது விதியின்கீழ், நான் மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, கல்லூரிகளில் சேருவதற்கான தகுதியை நெறிப்படுத்தும் விதிகள், ஒவ்வொரு பிரிவிற்கும் ஏற்படுத்திய இடங்களின் எண்ணிக்கை முதலியன அந்தந்தப் பல்கலைக்கழகங்களினால் வரையறை செய்யப்படுகின்றன. அந்த விதிகளுக்கேற்பவே மானியம் பெறும் கல்லூரிகளில் அந்தந்தக் கல்லூரி முதல்வர்களால் மாணவர்கள் சேர்க்கப்படுகின்றனர். இம் மாநிலத்தின் தேவையை நிறைவு செய்யும் அளவுக்கு கல்லூரிகளில் இடங்கள் இருப்பினும், ஒரே சமயத்தில்,

1971 ஜூலை 20] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

பல கல்லூரிகளுக்கும் மாணவர்கள் விண்ணப்பம் செய்வதால், முதலில் இடநெருக்கடி இருப்பதுபோல் தோன்றுகிறது. மேலும் பெரும்பான்மையான பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை தங்கள் விருப்பத்திற்கேற்ப குறிப்பிட்ட கல்லூரிகளில் சேர்க்க விழைகின்றனர். ஒரு குறிப்பிட்ட கல்லூரியில், குறிப்பிட்ட பிரிவில் இடம் கிடைக்கவில்லையெனில், குறைந்த மதிப்பெண் பெற்றிருந்தும், இட நெருக்கடிப் பிரச்சினை உள்ளதாகக் கருதுகின்றனர்.

1971-72 முதல் எல்லாக் கல்வி நிலையங்களும் எல்லாப் பிரிவுகளுக்கும் கீழ்க்கண்டவாறு இட ஒதுக்கம் செய்யவேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது:

பிற்பட்ட வகுப்பினர்	31%
ஷெட்யூல்டு வகுப்பினர் மலை ஜாதியினர்	18%

அந்த அரசு ஆணையின்படி இட ஒதுக்கம் செய்தால்தான் அரசு மானியம் கிடைக்கும். இந் நிபந்தனை தனியார் கல்லூரிகள், உள்ளாட்சித் துறைக் கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றிற்குப் பொருந்தும். 21—6—1956 நாளிட்ட அரசு ஆணை எண்: 1195 படி புகுமுக வகுப்பு, பி.ஏ., பி.எஸ்.சி., பி.காம். ஆகியவற்றின் ஒவ்வொரு பிரிவின் இளநிலை வகுப்பிலுள்ள மொத்த மாணவர்களின் எண்ணிக்கையைக் கொண்டுதான், தனித்தனியே இட ஒதுக்கம் கணக்கிடப்பட வேண்டும். ஒவ்வொரு கிளையிலும்—அதாவது கணித இயல், பௌதிக இயல் முதலானவற்றில் தனித்தனியே இட ஒதுக்கம் சரியாக இல்லாவிட்டாலும் எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்குக் கடைப்பிடிக்க தனியார் நிர்வாகத்தினர் அனுமதிக்கப்படுகின்றனர். பட்டப் படிப்பிற்கு மேற்பட்ட படிப்பிற்கான பிரிவுகளுக்கும் இவ்விதி பொருந்தும்.

1969-70-ல் 1.5 இலட்சமாக இருந்த கலை, அறிவியல் மாணவர்களின் எண்ணிக்கை 1970-71-ல் 1.63 இலட்சமாக உயர்ந்தது. இது மேற்பட்டப் படிப்புப் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கையை உள்ளடக்கியதாகும். கீழ்க் குறிப்பிட்டுள்ள புள்ளி விவரங்கள் கல்லூரிகளில் ஏற்பட்டுள்ள இடப்பெருக்கத்தை தெளிவுபடுத்தும் :

	1967–68	1968–69	1969–70	1970–71
புகுமுக வகுப்பு ..	57,000	60,000	64,000	70,058
பி. ஏ., பி.எஸ்.சி. }	53,000	59,106	65,991	75,668

1971-72-ல், 9 தனியார் கல்லூரிகளுக்கு அரசு மானியம் வழங்க முடிவு செய்துள்ளது. மேலும், தேவையான அளவு நன்கொடை பொது மக்களிடமிருந்து கிடைத்தால், மூன்று அரசினர் கல்லூரிகளைத் திறக்க அரசு முடிவு செய்துள்ளது. வழக்கமான முழுநேரக் கல்லூரிகளைத் தவிர கலை, அறிவியல் கொண்ட மாலை நேரக் கல்லூரிகள் 1965-66 முதல் திறக்கப்பட்டன. அவற்றில் பல பிரிவுகள் ஒவ்வோராண்டிலும் திறக்கப்பட்டன. 10 மாலை நேரக் கல்லூரிகள்

1970–71-ல் திறக்கப்பட்டன. இப்பொழுது 20 மாலை நேரக்கல்லூரிகள் நடைபெறுகின்றன. 1970-71-ல் இந்த 20 கல்லூரிகளில் 6,262 மாணவர்கள் பயின்று வந்தனர்.

இவை தவிர ஏ.எல். முதலியார் குழுவின் பரிந்துரைகளை அரசு ஏற்றுக்கொண்டது. இதன் விளைவாக, ஆங்கிலம் பயிற்று மொழியாக இல்லாத அரசினர் கல்லூரிகளில், அம் மொழி மூலம் கல்வியளிக்க, அதிகமான பிரிவுகளை திறக்க அரசு ஆணையிட்டது. இதனால், கல்லூரிகளில் மாணவர் எண்ணிக்கையும் அதிகமாக இருக்கின்றது.

மேலும், அதிகமான கல்லூரிகள் திறப்பதற்கு வேண்டிய எல்லாவித முயற்சிகளையும் அரசு மேற்கொண்டு வருகின்றது.

திரு. நா. வீராசாமி : அரசாங்க கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு ஒரு குழு அமைப்பது போல் தனியார் கல்லூரிகளிலும் அரசாங்கப் பிரதிநிதி ஒருவரை அனுப்பி மாணவர்களை முறையாகச் சேர்த்துக் கொள்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனை நல்ல யோசனைதான். ஆனால், அதை அரசு நேரடியாகச் செய்வதற்கு அரசாங்கத்தினிடம் ஆணை இல்லை. அதைப் பல்கலைக்கழகம் முடிவு செய்யவேண்டும். பல்கலைக்கழக சிண்டிகேட் அவையில் அந்தக் கருத்தைத் தெரிவித்தபோது, அந்த அவையில் உள்ள பெரும்பான்மையினர் அந்தக் கருத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆகவே, கட்டுப்படுத்தக் கூடிய ஒரு சூழ்நிலையைக் கொண்டுவரவேண்டும் என்பதுதான் அரசின் எண்ணம். அதைப் பல்கலைக்கழகம்தான் முடிவு செய்யவேண்டும். பல்கலைக் கழகத்திடம் அந்தக் கருத்தைத் தெரிவிக்க அரசு எண்ணியிருக்கிறது.

(3) 1971-72-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு (தொடர்ச்சி)

(அ) கோரிக்கை எண் 19—கூட்டுறவு.

(ஆ) கோரிக்கை எண் 22—கதர்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல்,

"கோரிக்கை எண் 19—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 5,88,01,700-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்"

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நிலவள வங்கிகளுக்குக் கட்சி சார்பற்ற அங்கத்தினர்களை நியமிக்க வேண்டியதன் அவசியம் பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 19—கூட்டுறவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 5,88,01,700-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.